# இனிய இருதயங்கள்

1



சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

# தேவனுடைய அன்பு

இந்த பெண்ணுக்குள்ள இந்த அன்பை பல கோடி எண்களால் பெருக்கிப் பாருங்கள். அப்பொழுது தேவனுடைய அன்பு எப்படிப்பட்டது என்பதைப்பற்றிய ஒரு அபிப்பிராயம் உங்களுக்குக் கிடைக்கும்



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: இடைவெளியில் நிற்றல், ஜூன் 23, 1963, ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

42. இன்று, இயேசுவே தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள மத்தியஸ்தராயிருக்கிறார். நாம் இலவசமாக மன்னிக்கப் பட்டிருக்கிறோம். நாம் பாவம் செய்தோமா என்று கூட தேவன் அறிய மாட்டார். ஒரு பொழுதும் நினைவுகூரத்தகாதபடி மறதியின் கடலில் நம் பாவங்கள் யாவும் போடப் பட்டுவிட்டன. நாமே இக்காரியத்தை செய்ய முடியாது. ஏனெனில் நாம் முடிவுள்ளவர்கள். அவரோ முடிவற்றவர், எல்லையற்றவர். நாம் முடிவுள்ளவர்கள். ஆதலால், நாம் இன்னும் நினைவில் வைத்திருக்க முடியும். ஏனெனில் நாம் அவ்வளவு பெரிதானவர்களல்ல, ஆனால் அவரோ மிகவும் பெரியவர். அதனால் நாம் எப்பொழுதாகிலும் பாவம் செய்தோமா என்பதை அவர் மறந்தே போய்விட்டார்.

அவருடைய சமுகத்தில் நாம் குமாரரும் குமாரத்திகளுமாயிருக்கிறோம். எவற்றிலெல் லாம் அவர் எப்படியிருந்தாரோ அவ்வாறாக நாம் இருக்கிறோம். நான் அவருடைய நீதி யாகும்படி, அவர் என்னுடைய பாவமானார். நீங்கள் அவருடைய நீதியாகும்படி, அவர் உங்களுக்காகப் பாவமானார். எனவே கிறிஸ்து இயேசுவில் உங்களுடைய அறிக்கை இருக்கும் வரையிலும் தேவன் உங்களில் பாவத்தைக் காண முடியாது. 2 கொரி 5:19, 20, 21. 1 தீமோ. 2:5

43. ஒரு சமயத்தில் ஒருவர் இவ்வாறு கூறினார், "அப்படிப்பட்ட ஒரு காரியத்தை நான் விசுவாசிப்பேனென்றால், நாம் மிகவும் குதூகலித்து, ஊரையே அலங்கரித்து, ஒவ்வொரு நடன சாலைக்கும் சென்று, மிகவும் உற்சாகமாக குடித்து மற்றும் பல்வேறு களிப்பான காரியங்களைச் செய்வேன். ஏனெனில்...." என்று கூறினார். "ஏன் அவ்வாறு செய்வீர்கள்" என்று கேட்டதற்கு அவர், "கிறிஸ்துவில் நீங்கள் ஏற்கனவே பத்திரப்படுத்தப்பட்டிருக்கிறீர்கள். எனவே இப்படி

யெல்லாம் நீங்கள் செய்தால் அதை பாதிக்கா தல்லவா?" என்று கூறினார்.

44. அதற்கு நான் கூறினேன்: "நீர் இப்படியெல்லாம் செய்வது, அதை நீர் பெற வில்லை என்பதைத்தான் காட்டுகிறது" என்று கூறினேன். உங்களுடைய இருதயத்தை தேவ னுடைய அன்பானது இயேசுகிறிஸ்துவின் மனவுருக்கத்தில் தொடும் போது, அவரை நீங்கள் மிகவும் நேசிப்பீர்கள், அதனால், உங்கள் பாவத்தைப்போல், உலகமும் உங்க ளுக்கு மரித்ததாக ஆகிவிடும். அவ்வாறுதான், நீங்கள் உங்களில் பரிசுத்தாவியைப் பெற்றுள் ளீர்கள் என்பதை அறிகின்றீர்கள்.

நீங்கள் அலறி, சப்தமிட்டு, அன்னிய பாஷைகளில் பேசக்கூடியதாக இருப்பதி னாலோ, அல்லது வேறு எவ்விதத்தினாலோ அல்ல; பாவம் உங்களுக்கு மரித்து இருக்கும் போதும், நீங்கள் இயேசுகிறிஸ்துவில் ஜீவித் திருக்கும் போதும் மாத்திரமே அதை அறியக் கூடும்.

**தேவனுடைய அன்பு எவ்வளவு ஐசுவரியமுள்ளதாயிருக்கிறது. எவ்வளவு சுத்தமாயிருக்கிறது! பார்த்தீர்களா?**

45. சமீபத்தில் இங்கே கென்டக்கியிலுள்ள லூயிவில்லில் வாழ்ந்து வந்த ஒரு மாதைக்குறித்து ஒரு ஊழியக்காரர் கூறிக் கொண்டிருந்தார். அவள் தனது இருபத்தைந்து, முப்பது ஆண்டு வயதுக் காலம் வரையிலும் நீண்ட நாட்கள் திருமணமாகாமல் காத்துக் கொண்டிருந்தாள். அவள் அருமையான உறுதியானதொரு கிறிஸ்துவ பெண்ணாயிருந்தாள். அதே லூயிவில்லில் நல் வாழ்க்கையினை நடத்தாத ஒரு குறிப்பிட்ட மனிதன் இருந்தான். அவன் நாட்டியங்களுக்கும், இரவு விடுதிகளுக்கும் சென்று தன் காலத்தைக் கழித்தவனாயிருந்தான். ஆனால் ஒரு நாள் அவன் தனது பாவங்களுக்கு மன்னிப்பைக் கண்டு கொண்டான். அவன் உண்மையான உறுதியானதொரு கிறிஸ்தவனாக ஆனான். அதற்கு ஓராண்டுக்குப் பிறகு, மேற்சொன்ன அந்த இளம் கிறிஸ்தவ மாதிடம் அவன் காதல் கொண்டான். அந்தப் பெண்

மணியும் அவனிடம் ஆழ்ந்த காதல் கொண் டாள். அவர்கள் இருவரும் மணம் புரிந்து கொண்டார்கள்.

46. அவர்கள் இல்லற வாழ்க்கையை இரண்டு ஆண்டுகள் கழித்த பிறகு, அந்த மாது தன் கணவனிடம் ஒரு நாள் இவ்வாறு கூறினாள்: "என் அன்பரே, புதிதாக கிறிஸ்த வனாக ஆன உங்களுக்கு இது சற்று கடினமாக இருக்கக்கூடும் என்று கருதுகிறேன். நான் சிறு பெண்ணாக இருந்தது முதலே கிறிஸ்தவளாக இருந்திருக்கிறேன். ஆனால் இளம் கிறிஸ்தவராக இருக்கும் உங்களுக்கு, இதற்கு முன் இவ்வளவு நீண்ட காலம் நீங்கள் பாவத்தை செய்து கொண்டேயிருந்தபடியினால், பாவத்தின் வஞ்சனைகளையும், சோதனை களையும் எதிர்த்து நிற்பதென்பது கடினமானது தான்" என்றாள்.

அதற்கு அவன் கூறினான்: "ஆம், அது ஒரு போராட்டமாகத் தான் இருக்கிறது" என்று.

47. அவள் கூறினாள்: "நீங்கள் ஒரு காரியத்தை நினைவில் கொள்ளுங்கள்.

அதாவது, சத்துருவானவன் உங்களை எங்காவது நிலைகுலையச்செய்து, அதனால் நீங்கள் வீழ்ந்து பாவத்திற்குள் மீண்டும் போய்விடுவீர்களானால், அதினிமித்தம் நீங்கள் வீட்டை விட்டு நீங்கியிருக்க வேண்டாம். நீங்கள் திரும்பவும் வீட்டிற்கு வந்து விடுங்கள். நீங்கள் திருமணம் செய்து கொண்ட அதே மனைவியை நீங்கள் வீட்டில் காணலாம்." அவள் மேலும் கூறினாள், "நீங்கள் மீண்டும் ஜெபிக்க நான் உங்களுக்கு உதவுவேன், மீண்டும் தேவனிடத்தில் திரும்புவதற்கு நான் ஜெபத்தின் மூலம் உங்களுக்கு உதவுவேன். எனவே நீங்கள் தூரமாகபோய்விட நான் விரும்பவில்லை. நீங்கள் எப்படியிருந்தீர்கள் என்ற அடிப்படையின் பேரில் நான் உங்களை மணக்கவில்லை. நான் உங்களை நேசித்த படியினால் மணந்து கொண்டேன். நீங்கள் என்ன செய்தபோதிலும், நான் இன்னும் உங்களை நேசிக்கிறேன். நான் உங்களில் அன்புகூர்ந்தபடியினால் தான் உங்களை மணந்து கொண்டேன்" என்று கூறினாள்.

48. அந்த மனிதன் அந்நாளில் தன் வேலைக்குச் சென்ற பொழுது, தான் வேலை செய்கிற இடத்தில் இக்காரியங்களை பற்றி பிரஸ்தாபித்தது கேட்கப்பட்டது. அவன் கூறினான்: "**இப்படிப்பட்டதான ஒரு பெண்ணுக்கு எதிராக ஒரு மனிதன் எவ்வாறு தவறு இழைக்க முடியும்?** ஒரு மனைவி தன் கணவன் என்ன செய்த போதிலும் அவனை மிகவும் நேசித்து, அவன் மீண்டும் திரும்பி வர வேண்டும் என்று விரும்புவதும், அவனை திரும்பவும் ஏற்றுக்கொள்ள விரும்புவதும், இவ்வாறு மீண்டும் செய்ய முயற்சிப்பதுமான ஒரு காரியத்தை ஒரு பெண் செய்தால் **அவளுக்கு எதிராக அவன் எப்படி தவறான எந்த ஒன்றையும் செய்ய முடியும்?**" பாருங்கள். **இந்த பெண்ணுக்குள்ள இந்த அன்பை பல கோடி எண்களால் பெருக்கிப் பாருங்கள். அப்பொழுது தேவனுடைய அன்பு எப்படிப்பட்டது என்பதைப்பற்றிய ஒரு அபிப்பிராயம் உங்களுக்குக் கிடைக்கும்**.

49. ஒரு மனிதன் இயேசு கிறிஸ்துவிடம் அன்பு கூறும்போது, உலகத்தின் காரியங்கள்...

அவர் உங்களுக்கு என்ன செய்தார் என்பதைப்பற்றி வேதத்தின் வெளிச்சத்தில் நீங்கள் எண்ணிப் பார்க்கையில் -- ஏதோ சில மனக்கிளர்ச்சியின் வெளிச்சத்தில் அல்ல -- அது என்ன என்பதைப் பற்றிய உண்மையின் வெளிச்சத்தில் பார்க்கையில், அப்பொழுது உங்களுக்கு ஏதோ நேரிடுகிறது. அவ்வமயம் புதிய பிறப்பை நீங்கள் அடைகிறீர்கள். **பாவமானது அப்பொழுது நடு இரவைப்போல் மாரித்ததாக இருக்கிறது. ஒளி உங்களி லிருக்கும் வரைக்கும், இருள் எவ்வாறு உங்களில் ஊடுருவும்? அவ்வாறு ஆக முடியாது.** வாக்குத்தத்தத்தைப் பிடித்துக் கொண்டு தன்னையே இடைவெளியில் சமர்ப்பித்த ஒரு மனிதனுக்கு தேவன் அதைத் தான் செய்தார். மோசேயானவன் அந்த முந்தின சாயலுக்கு சாயலாயிருக்கிறான். எனவே தான் அவன் ஜனங்களுக்காக இடைவெளியில் நின்றான்.

★★★★★

மனிதனைத் தேற்றும்படி -
அவனிடம் அன்பு காட்டும்படி
தேவன் அவனுக்கு ஒரு
மனைவியைக் கொடுக்கிறார், ஒரு
நல்ல மனைவியை பெற்றிருக்கிற
எந்த மனிதனும் அதை
அறிந்திருக்கிறான். ஒரு நல்ல
மனைவியைக் குறித்து
ஏதோவொன்று உண்டு...



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## செய்தி: அவர் உங்களை விசாரிக்கிறவர், மார்ச் 1, 1960, போனிக்ஸ், அரிசோனா, அமெரிக்கா

24. கர்த்தருக்குச் சித்தமானால், இன்றிரவு 1 பேதுருவின் புஸ்தகத்திலிருந்து என்னுடைய பாடத்தை எடுக்க விரும்புகிறேன். நீங்கள் என்னுடன் வாசிக்க விரும்பினால், 1 பேதுரு 5–ம் அதிகாரம், 5–ம் வசனத்திலிருந்து தொடங்கலாம்: 1 பேதுரு 5:5 முதல்.

**அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத் தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார்,**

**தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.**

**ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.**

**அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.**

**25.** என்னவொரு அருமையான வேதவாசிப்பு! இப்பொழுது, "**அவர் உங்களை விசாரிக்கிறவர்**" என்பதன் பேரில் ஒரு பாடத்திற்காக இதை எடுக்க விரும்பினேன்.

**26.** மேலும் அது பரி. யோவான் **14–**ம் அதிகாரத்திலும் எழுதப்பட்டுள்ளது.

உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.

என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்.

நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என் னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.

**54.** நாம் மற்ற பரிகாரங்களுக்கு திரும்பும் போது அதை தான் நாம் செய்கிறோம். அங்கே அநேக பரிகாரங்கள் உள்ளன, ஆனால் நிவாரணம் (Cure) ஒன்று மாத்திரமே உள்ளது. கிறிஸ்துவே நிவாரணமாயிருக்கிறார், இதில் மாத்திரமே நிவாரணம் உள்ளது. **அவர் நமக்காக கவலைப்படுகிறார். அவர் நம்மை நேசிக்கிறார், நாம் அவரிடம் வரும்படி அவர் விரும்புகிறார்.** அவ்விதமாகத்தான் தேவன் நம்மை உண்டாக்கியிருக்கிறார், தேறுதல் அடையும்படி வாஞ்சிக்கும்படியான பரிசுத்த காரியங்கள் நம்மில் உள்ளன.

**55.** மனிதனைத் தேற்றும்படி – அவனிடம் அன்பு காட்டும்படி தேவன் அவனுக்கு ஒரு மனைவியைக் கொடுக்கிறார், ஒரு நல்ல மனைவியை பெற்றிருக்கிற எந்த மனிதனும் அதை அறிந்திருக்கிறான். ஒரு நல்ல மனைவியைக் குறித்து ஏதோவொன்று உண்டு... ஒரு மனிதன் தன்னுடைய

வியாபாரத்தில் அல்லது – அல்லது தன்னுடைய ஜீவியப் பாதையில் ஏற்பட்ட எதிர்பாராத முடிவால் வருத்தத்தோடு வீட்டிற்கு வரக்கூடும்; யாருமேயில்லையென்றோ, எந்த மருத்துவரும் இல்லையென்றோ கவலையில்லை...

**56.** அவ்விதமாகத்தான் எனக்கும் இருக்கிறது. நான் வெளிநாடுகளிலிருந்தோ அல்லது வேறு எங்கிருந்தாவது வரும் போது, நான் மிகவும் பதட்டமுள்ளவனாகவும், நிலைகுலைந்து போனவனாகவும், தூக்கத்தை இழந்தவனாகவும் வரும்போது. பசியாயுள்ள சிறு பிள்ளைகள் தெருவில் அழுவதை நான் கேட்கிறேன், அவர்களை நான் பார்க்கிறேன், ஒ, அழுது கொண்டு செல்கிறார்கள், அது அப்படியே என்னைக் கொன்று விடுகிறது. பிறகு நான் வீட்டிற்கு வரும்போது, என்னுடைய மனைவி இருக்கையின் கை பக்கத்தில் உட்கார்ந்து, தன்னுடைய கரத்தை என்னைச் சுற்றிலும் போட்டுக் கொண்டு, "ஓ,

பில், நான் – நான் அதை புரிந்து கொள்கிறேன், உங்களுக்குத் தெரியும்” என்று கூறுவாள்.

**57.** மனைவியிடமிருந்து வரும் சில தட்டிக் கொடுக்கும் சிறு காரியங்கள் அதிகமாக அர்த்தமுள்ளதாகும்; ஒரு கணவனுக்கும் மனைவியிடம் அதே காரியம் இருக்கிறது. அந்த விதமாகத்தான் அது இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். நாம் அதற்குப் பதிலாக ஏதோவொன்றை பதிலீடாகப் பெறும் போது, அந்த ஸ்தானத்தை எடுக்கும்படி முயற்சிக்க வேறு ஏதோவொரு ஸ்திரீயை நீங்கள் பெற்றுக் கொள்ளும் போது, அல்லது மற்ற ஏதோவொரு மனிதனை பெற்றுக்கொள்ளும் போது, நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைப் பாருங்கள்.

**58.** இப்பொழுது, ஏன், அவர் நமக்கு நண்பர்களைத் தருகிறார். அவன் நேசிக்கிறான்... நாம் – நாம் நண்பர்களைக் கொண்டிருக்க வேண்டும். நமக்கு

சகோதரர்கள் இருக்க வேண்டும். ஆபத்துக் காலத்தில் ஒரு நல்ல சிநேகிதனிடம் போய், "ஓ, என்னுடைய நண்பனே, குறிப்பிட்ட – குறிப்பிட்ட காரியம் சம்பவித்து விட்டது" என்று சொல்வதென்பது எவ்வளவு நன்றாக இருக்கும். ஒரு நல்ல, நம்பிக்கைக்கு பாத்திரமான நண்பன் உட்கார்ந்து உங்களிடம் பேசுவான், அது அற்புதமானது. அது தேவனுடையதாக உள்ளது. உங்கள் மனைவி அப்படியே தேவனுடையவளாக இருப்பது போலவும், உங்களுடைய கணவன் தேவனுடையவனாக இருப்பது போலவும். நீங்கள் உண்மையுள்ளவர்களாக இருக்கும் போது.

**59.** ஆனால் மனிதன் கூட தன்னுடைய விழுந்து போன சுபாவத்தைக் காண்பிக்க, அப்படிப்பட்டவைகளை அவனில் பெற்றிருக்கிறான், தேவன் அவனுக்குக் கொடுத்ததை அவன் சீரழிக்கிறான். முதலாவது காரியமாக, அவனுக்கு தேறுதலைக் கொடுப்பதற்காக பரிசுத்த

ஆவிக்குப் பதிலாக அவன் (மது) புட்டியை அல்லது உலகத்தை எடுத்துக் கொள்கிறான். அவனுடைய ஜீவியத்தின் இன்ப துன்பங்களில் பங்கு கொள்ளும்படிக்கு தேவன் அவனுக்கு ஒரு மனைவியைக் கொடுக்கிறார், அவன் அவளுடன் திருப்தியடையாமல், மற்றொரு மற்றொருவளை அவன் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது; அது போலவே ஸ்திரீயும் வேறொருவனை பெற்றுக் கொள்கிறாள்; வாலிப ஜனங்களும் மற்றவர்களும் அவ்விதமே செய்கின்றனர்.

**60.** கர்த்தர் நமக்கு அருளியிருக்கிற இந்த எல்லா தேற்றரவாளர்களும் இருந்தும் கூட, பிரயாணத்தின் முடிவை அது அடையும் போது, காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நம்முடைய புருவத்தின் மீது ஒரு தலையணையை நாம் அழுத்தினவர்களாய், மரித்துக் கொண்டிருப்போம், நம்முடைய மனைவியானவள் தன்னுடைய முகத்தில் கண்ணீர் வடித்தவளாய், தேவனை நோக்கி அவளுடைய கண்களை உயர்த்தினவளாய்

நின்று கொண்டிருக்க மாத்திரமே செய்ய முடியும். நம்முடைய நண்பனோ நம் தோளில் தட்டிக் கொடுத்தவனாய், நம்முடைய கரங்களைக் குலுக்கினவனாய், தன்னுடைய கைகளை பிசைந்து கொண்டு நின்று கொண்டிருக்கக் கூடும், ஏனெனில் அதற்கு மேல் அவனால் எதுவும் செய்ய முடியாது. ஆனால் அச்சமயத்தில் அந்த தேற்றரவாளன் இருப்பாரானால், தாவீது சொன்னது போல, "ஆம், நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன். நீர் என்னோடு கூட இருக்கிறீர். மரண இருளின் பள்ளத்தாக்கிலும் கூட உமது கோலும் உம் தடியும் என்னைத் தேற்றும்" (என்று கூற இயலும்).

**61.** மனிதன் ஏன் தாகமுள்ளவனாயும் பசியுள்ளவனாயும் இருக்கிறான்? ஏனெனில் அவன் உண்டாக்கப்பட்ட போது, அவனைத் தேற்றரவு பண்ணும்படிக்கு தேவன் வாசம் பண்ணும்படியாக அவனுக்குள் ஒரு சிறு இடம் சிருஷ்டிக்கப்பட்டு, அவன்

உண்டாக்கப்பட்டிருக்கிறான். அவன் பாவத்தின் காரணமாக தன்னைத்தான் உதறிக் கொண்டு, தேவனை விட்டு அப்பால் செல்லும் போது, அந்த இடம் வெற்றிடமாக இருக்கிறது. அதன் காரணமாகத்தான் அவன் அதற்காக – அதை அடைவதற்காக பசியாயிருக்கிறான்.

**62.** இன்று கிறிஸ்தவர்களாகிய நம்மிடமுள்ள பிரச்சனை என்னவெனில், நம்முடைய விழுந்து போன சகோதரனிடமுள்ள காரியம் என்னவென்று அவனிடம் காட்டுவதற்கு நம்மால் செய்யக் கூடிய எல்லாவற்றையும் நாம் செய்யாமல் இருக்கிறோமா என்று நான் அஞ்சுகிறேன். அவனோடுள்ள காரியம் அதுதான். வாலிப பருவத்தினரிடையேயுள்ள குற்றங்களுக்கான காரணம் அது தான், அதன் காரணமாகத்தான் சபையில் குற்றங்கள் நடக்கின்றன, வீடுகளில் குற்றங்கள் நடக்கின்றன, அதுதான் இளம்பருவத்தினரை குற்றம்புரிய வைக்கிறது.

**63.** அதன் காரணமாகத்தான் நடத்தை கெட்டவர்களும் (beatniks) மற்றவர்களும் தெருவில் மேலும் கீழுமாக குதித்துக் கொண்டு, இந்த எல்லா காரியங்களையும் அதிகரிக்கச் செய்கின்றனர், ஏனெனில் அவர்களைத் திருப்திபடுத்துவதற்காக ஏதோவொன்றை கண்டு கொள்ள அவர்கள் முயற்சிக்கின்றனர்.

**64.** கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் இன்றிரவு நான் இதைச் சொல்லட்டும்: பரிசுத்த ஆவியின் வல்லமை வருவது போன்று திருப்திபடுத்துவது எதுவுமில்லை. அது உங்களுடைய ஜீவியத்தையும் உங்களுடைய மனப்பான்மையையும் மாற்றி, உங்களுக்குத் தேற்றரவையும், நித்திய ஜீவனையும் கொடுக்கும்.

*இம்மானுவேலின் இரத்தத்தினால் நிறைந்த ஊற்று ஒன்றுண்டு*

*அங்கு பாவிகள் அந்த இரத்த வெள்ளத்தில் மூழ்கும் போது*

*தங்கள் எல்லா பாவக் கறைகளையும் போக்கிக் கொள்கின்றனர்*

**65.** ஒரு மனைவியானவள் தேற்றி முதுகில் தட்டிக் கொடுக்கலாம். ஒரு நண்பன் உட்கார்ந்து நல்ல ஆலோசனைகளை வழங்கலாம். ஆனால் பாவத்தை நீக்குவதற்கான ஒரே காரியம் மாத்திரமே உண்டு, அதுதான் கர்த்தராகிய இயேசுவின் இரத்தமாகும்.

*என்னுடைய பாவத்தை எதனால் நீக்கக் கூடும்?*

*இயேசுவின் இரத்தத்தைத் தவிர வேறொன்றுமில்லை;*

*என்னை மீண்டும் சுகப்படுத்த எதனால் கூடும்?*

*இயேசுவின் இரத்தத்தைத் தவிர வேறொன்றுமில்லை.*

எழுத்தாளர் கூறுவது போல:

*ஓ, விலையேறப்பெற்ற நதி*

அது பனியைப் போன்று என்னை வெண்மையாக்கும்;

வேறே நதியை அறியேன்,

இயேசுவின் இரத்தம் தானே.

★★★★★

# அவர் அலுவலகத்திலிருந்து திரும்பி வரும் வரைக்கும், அது அவரை மகிழ்ச்சியான நிலையில் வைத்திருக்கும்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: மேம்பட்ட புலன்,

Jeffersonville, Indiana, USA
59-12-27E

4. காலஞ்சென்ற பால் ராடர் கூறினது போல அவர் தன்னுடைய .... ஒரு சமயம் அவர் ஒரு கதை சொன்னார். அவரும் அவருடைய மனைவியும் மேசையினருகில் உட்கார்ந்து கொண்டிருந்தனராம். அவருடைய மனைவி எங்கோ போக வேண்டுமென்று அல்லது எதையோ செய்ய வேண்டுமென்று விரும்பினாளாம். அவர் அவளிடம், "என்னால் முடியாது" என்று சொல்லி விட்டு அவளுடைய வாயை அடைத்து விடுவாராம்.

அவர் பார்த்த போது, அவளுடைய கன்னங்களில் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. "அவள் இவ்வளவு எளிதாக புண்பட்டால், புண்பட்ட நிலையிலேயே அவள் இருக்கட்டும்" என்று மனதில் எண்ணிக் கொண்டார். எனவே அவர், ஆண்மைத்தனம்

கொண்டவரைப் போல, கை துடைக்கும் காகிதத்தை மடித்து அவருடைய தட்டின் மேல் வைத்தார்.

5. அவள் எப்பொழுதும் கதவருகில் நின்று கொண்டு, அவரை முத்தமிட்டு வழியனுப்புவது வழக்கம். அவர் கதவுக்கு வெளியே செல்கையில், அவருக்கு கையாட்டுவாள். அவர் அலுவலகத்திலிருந்து திரும்பி வரும் வரைக்கும், அது அவரை மகிழ்ச்சியான நிலையில் வைத்திருக்கும்.

அன்று காலை, அவர் வெளியே செல்லப் புறப்பட்டபோது, அவள் கதவண்டையில், நின்று கொண்டிருந்தாள். அவர் அவளை முத்தமிட்டு, வாசல் வரைக்கும் நடந்து சென்று, வாசல் கதவைத் திறந்து, திரும்பிப் பார்த்த போது, அவள் தலைகுனிந்த வண்ணம், இன்னும் புண்பட்டவளாய் கதவண்டையில் நின்று கொண்டிருந்தாள். அவர் அவளுக்கு கையாட்டி விடை பெற்றாராம். அவளும் கையாட்டி வழியனுப்பினாளாம்.

6. அவர் தெருவில் சென்று கொண்டிருந்த போது, “நான் வீடு திரும்பும் முன்னர், எனக்கு ஏதாவதொன்று நேரிட்டு விட்டால், அல்லது அவளுக்கு ஏதாவதொன்று நேர்ந்தால், தேவன் எங்களை காட்சியிலிருந்து அழைத்துக்கொள்வார். அவள் எவ்வளவு நல்லவள். எவ்வளவு இனியவள்” என்று மனதில் எண்ணினாராம். அவர் தெருவில் செல்லச் செல்ல, அவருடைய இருதயம் அதிகமாக வேதனையடைந்ததாம்.

எனவே அவர் திரும்பி ஓடி வந்து, வாசல்கதவைத் திறந்து, வீட்டிற்குள் ஓடி, கதவைத் திறந்தாராம். அவர் கதவைத் திறந்தபோது, யாரோ அழும் சத்தம் கேட்டது. அவர் சுற்றிலும் பார்த்த போது, அவள் கதவுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்தாள். அவர், “என்னை மன்னித்துக் கொள், நான் மன்னிப்பு கோருகிறேன்” என்று கேட்கவில்லையாம். அவர் ஒன்றுமே சொல்ல வில்லை. அவர் அவளைப் பிடித்து இழுத்து, முத்தமிட்டு, வெளியே நடந்து விட்டாராம். அவர் வாசலை விட்டு வெளியே சென்ற

போது, அவள் மறுபடியும் கதவண்டையில் நின்று கொண்டிருந்தாள். அவர் “விடைபெறுகிறேன்” (bye) என்றார். அவளும் முதலில் செய்தது போலவே விடை கொடுத்து வழியனுப்பினாள். ஆனால் இரண்டாம் முறை அவள் செய்த போது, அதில் உணர்ச்சி கலந்திருந்தது.

எனவே அது அப்படித்தான் உள்ளது. அது உணர்ச்சி கலந்திருக்குமானால், பாருங்கள், அது உண்மையில் தேவனிடத்திலிருந்து வந்த ஒன்று.

★★★★★

முதலாவதாக அவளிடம் பண்பு உள்ளதா என்று பாருங்கள். அதன் பின்பு அவளை நீங்கள் நேசித்தால், மிகவும் நலமாயிருக்கும்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: மணவாட்டியைத் தெரிந்துகொள்ளுதல், Los Angeles, California USA 65-04-29E

35. நான் அநேக தம்பதிகளுக்கு மணம்புரிந்து வைத்திருக்கிறேன். நான் எப்பொழுதும்... அது கிறிஸ்துவையும் மணவாட்டியையும் எனக்கு ஞாபகப்படுத்துகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு இங்கு நான் நடத்தின விவாகங்களில் ஒன்று, என் வாழ்க்கையில் மிகவும் சிறந்த ஒன்றாகத் திகழ்ந்தது. அது அநேக ஆண்டுகளுக்கு முன்பு நான் ஒரு வாலிப போதகராக இருந்த போது.

என் சகோதரன் டபிள்யூ. பி.ஏ.யில் (W.P.A) பணி புரிந்து கொண்டிருந்தார். உங்களில் யாருக்காவது அது இன்னமும் ஞாபகத்தில் உள்ளதா இல்லையா என்று எனக்குத் தெரியாது – என் வயதுள்ளவர்களுக்கு. அது அரசு மேற்கொண்ட ஒரு திட்டம் (Project) என் சகோதரன் முப்பது மைல் தொலைவில் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவர்கள் ஏரிகளை வெட்டினர் தண்ணீரை நஷ்டப்படுத்தாமல் அதை சேமித்து வைக்க. நான் வசித்த ஜெபர்ஸன்வில்லிலிருந்து நூறு மைல் தொலைவில் உள்ள இந்தியானா போலீஸை சேர்ந்த ஒரு பையன் அவருடன் பணி புரிந்து கொண்டிருந்தான். அங்கு ஒரு...

அவன் ஒரு நாள் என் சகோதரனிடம், "டாக் (Doc), விவாகம் நடத்த போதகருக்கு செலுத்த வேண்டிய காணிக்கைக்கு போதிய பணம் என்னிடமிருந்தால் நான் விவாகம் செய்துகொள்வேன்" என்றான். அவன், "அதற்காக லைசென்ஸ் பெற என்னிடம் போதிய பணம் உள்ளது. ஆனால் போதகருக்குக் கொடுக்கத் தான் பணம் இல்லை" என்றான்.

அப்பொழுது டாக் அவனிடம், "என் சகோதரன் போதகர். அவர் ஒருக்கால் உனக்கு விவாகம் செய்து வைக்கலாம். இதற்கெல்லாம் அவர் பணம் வாங்குவது கிடையாது" என்றார்.

அப்பொழுது அவன், "எனக்கு விவாகம் நடத்தி தருவாரா என்று அவரைக் கேட்பீர்களா?" என்றான்.

36. அன்றிரவு என் சகோதரன் இதைக் குறித்து என்னிடம் கேட்டார். நான், “அவர்கள் ஏற்கெனவே வேறு யாரையும் விவாகம் செய்து கொள்ளாமலிருந்தால், சட்டப்படி எல்லாம் ஒழுங்காக இருந்தால், நான் நடத்தி வைக்கிறேன்” என்று ஒப்புக் கொண்டேன்.

அவர்... அவனைக் கேட்பதாகக் கூறினார். நான், “எல்லாம் சரியாயிருந்தால், அவனை இங்கு வரச் சொல்லுங்கள்” என்றேன்.

சனிக்கிழமை அந்த பையன் வந்தான். அதை நினைத்துப் பார்க்கும் போது, அது என் வாழ்க்கையில் நடந்த ஒரு விசேஷித்த சம்பவம். அன்று பகல் மழை பெய்து கொண்டிருந்தது. ஒரு பழைய ஷெவர்லே கார், அதன்

விளக்குகள் 'பேல்' கம்பியைக் கொண்டு (Baling wire) மின்சாரத்துக்காக இணைக்கப்பட்டதாய் அங்கு வந்து நின்றது. என் மனைவியை இழந்த சில நாட்களுக்கு பின்பு இது நடந்தது. நான் இரு சிறிய அறைகளில் தங்கியிருந்தேன். 'டாக்'கும் அப்பொழுது என்னுடன் கூட அவர்களிருவருக்காகவும் காத்துக் கொண்டிருந்தார். அந்த பையன் காரை விட்டு இறங்கினான் காண்பதற்கு அவன் மணமகன் போலவே எனக்குத் தோன்றவில்லை. அப்படி யாருக்குமே தோன்றியிருக்க முடியாதென்று கருதுகிறேன். அக்காலத்தில் ஒன்றரை டாலருக்கு ஒரு நல்ல ஜதை காலணிகள் வாங்க முடியும். அவனோ கிழிந்து போன காலணிகளை

அணிந்திருந்தான். அவனுடைய கால் சட்டை 'தொள தொள'வென்றிருந்தது. அவன் மூஞ்சூறு தோலினால் செய்யப்பட்ட 'ஜாக்கெட்' (Mole Skin Jacket) ஒன்றை அணிந்திருந்தான். பழைய காலத்தவராகிய உங்களில் சிலருக்கு அது ஞாபகமிருக்கும். அது சலவை இயந்திரத்தில் போடப்பட்டு, தண்ணீரில் அலசாதது போல் சுருங்கிக் காணப்பட்டு, மூலைகள் கட்டப்பட்டிருந்தன.

37. ஒரு சிறிய பெண் கட்டம் போட்ட உடை ஒன்றை அணிந்து காரின் மறு பக்கத்திலிருந்து இறங்கி வந்தாள். எனக்கு தெரியவில்லை. ஒரு முறை அப்படிப்பட்ட துணியை தவறான பெயரால் அழைத்துவிட்டேன். அதன் பெயர் 'ஜிங்காம்' (Gingham) எனவே

அது... அதை மறுபடியும் தவறாகக் கூறுகிறேன். நான் எப்பொழுதுமே அதன் பெயரை தவறாக கூறுகிறேன். நான் சொன்னேன்... அவள் காரிலிருந்து இறங்கி வந்தாள். அவர்களிருவரும் படிக்கட்டுகள் ஏறி வந்தனர். அவர்கள் உள்ளே வந்த போது, அந்த ஏழை பெண்... நான் நினைக்கிறேன் அவள்... அவள் அணிந்து கொண்டிருந்ததெல்லாம் ஒரு பாவாடை மாத்திரமே. அவள் காலணிகள் ஒன்றும் அணிந்திருக்கவில்லை. அவள் இந்தியானா போலீஸிலிருந்து நடந்தும், நடுநடுவே காரில் பிரயாணம் செய்தும் வந்தாள். (hitch-hike) அவளுடைய நீண்ட கூந்தல் பின்னப்பட்டு, பின்னால்

தொங்கிக் கொண்டிருந்தது காண்பதற்கு மிகவும் சிறிய பெண்.

நான் அவளிடம், “விவாகம் செய்துகொள்ள உனக்குப் பெரிய வயதாகி விட்டதா?” என்று கேட்டேன்.

அவள், “ஆம் ஐயா” என்று பதிலளித்துவிட்டு “என் பெற்றோர் எழுதிக் கொடுத்த அனுமதியை வைத்திருக்கிறேன். நான் லைசென்ஸ் பெற அதை நீதிமன்றத்தில் காண்பிக்க வேண்டும்” என்றாள்.

நான், “சரி, இந்த விவாகத்தை நடத்தி வைக்கும் முன்பு உங்களிடம் சற்று பேச விரும்புகிறேன்” என்றேன்.

அவர்கள் உட்கார்ந்தனர். அவன் அறையை சுற்றும் முற்றும் பார்த்தான். அவனுடைய தலைமயிர் வளர்ந்து போய், அது வெட்டப்பட

வேண்டியதாயிருந்தது. அவன் சுற்றும் முற்றும் அறையைப் பார்த்துக் கொண்டே இருந்த காரணத்தால், நான் சொல்வதை அவன் கவனிக்கவில்லை. நான், "மகனே, நான் சொல்வதை கவனமாகக் கேட்கவேண்டும்" என்றேன்.

அவன், "சரி, ஐயா" என்றான்.

நான், "இந்தப் பெண்ணை நீ நேசிக்கிறாயா"? என்று கேட்டேன்.

அவன், "ஆம் ஐயா நான் நேசிக்கிறேன்" என்றான்.

நான், "அவளை விவாகம் செய்து கொண்ட பின்பு அவளைக் கூட்டிச் செல்ல ஒரு வீடு இருக்கிறதா?" என்றேன்.

அவன், "ஆம் ஐயா" என்றான்.

நான், “சரி, உன்னை ஒன்று கேட்க விரும்புகிறேன். நீ பி. டபிள்யூ. ஏ.வில் வேலை செய்வதாக கேள்விப்படுகிறேன்” என்றேன்.

அவன், “ஆம் ஐயா” என்றான் (வாரத்துக்கு பன்னிரண்டு டாலர் சம்பளம்)

நான், “அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்து தர முடியுமென்று நினைக்கிறாயா?” என்றேன்.

அவன், “என்னால் முடிந்த அனைத்தும் செய்வேன்” என்றான்.

நான், “அது சரி அவனை வெளியாக்கினால்... சகோதரியே அவனுக்கு வேலை போய்விட்டால் நீ என்ன செய்வாய்? உன் தாயிடமும் தந்தையிடமும் ஓடிப்போய் விடுவாயா?” என்று கேட்டேன்.

அவள், "இல்லை ஐயா. நான் அவருடன் தங்கியிருப்பேன்" என்றாள்.

நான் அவனிடம், "ஐயா உனக்கு மூன்று நான்கு பிள்ளைகள் இருந்து அவர்களுக்கு உண்ண உணவு இல்லாமல் உனக்கும் வேலையில்லாமல் இருந்தால் நீ என்ன செய்வாய்? அவளை அனுப்பிவிடுவாயா?"

அவன், "இல்லை, ஐயா நான் கஷ்டப்படுவேன். நாங்கள் எப்படியாவது சமாளிப்போம்" என்றான்.

அதைக் கேட்ட போது, நான் சிறியவன் என்னும் உணர்ச்சி ஏற்பட்டது. அவன் அவளை உண்மையாகவே நேசிக்கிறான் என்பதை அறிந்து கொண்டேன். அவர்கள் ஒருவரையொருவர்

நேசித்தனர். அவர்களுடைய விவாகத்தை நடத்தி வைத்தேன்.

38. அவன் அவளை எங்கு கொண்டு சென்றான் என்று வியந்தேன். சில நாட்களாக என் டாக் சகோதரனிடம், "அது எங்குள்ளது"? என்று கேட்டேன்.

அவர், "நியூ ஆல்பனிக்குச் செல்" என்றார் (அது எங்களுக்கு கீழேயுள்ள ஒரு சிறு பட்டினம்) அந்த ஆற்றங்கரையில் சிறிது தகரம் இருக்கும். நான் மின்சார வாரியத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த போது. மற்ற அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து கொண்டு அரட்டை அடித்து சிரித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், நான் மட்டும் வண்டியில் ஏறி ஆற்றங்கரைக்கு சென்று ஜெபம்

செய்து, முன்பு இரும்புத் தொழில் நடந்து கொண்டிருந்த தகரக் கொட்டகையில் வேதாகமத்தைப் படிப்பது வழக்கம்.

அங்கு பழைய பெட்டி கார்கள் (Box cars) இருக்கும். இந்த பையன் அவைகளில் ஒன்றை எடுத்து ஒரு கதவை அறுத்து. செய்தித்தாள்களையும் இணைக்கும் டாக்கி பொத்தன்களையும் (Tacky buttons) எடுத்துக்கொண்டு "டாக்கி பொத்தன்கள்" என்றால் என்னவென்று எத்தனை பேருக்குத் தெரியும்? அப்படியானால் கென்டக்கி நாட்டவர் யாரும் இங்கில்லை. ஒரு அட்டைத் துண்டை எடுத்து, அதில் கட்டை விரல் இணைப்பு ஆணியை (Thumbtack) சொருகி அதை உள்ளே

தள்ளுவது... அதுதான் "டாக்கி பொத்தன்"

39. அவர்கள் பெட்டி கார்களை அங்கு வைத்திருந்தனர். அவன் அந்த இரும்புத் தொழிற்சாலைக்கு சென்று, அவைகளில் ஒன்றை வாங்கி அதற்கு படிக்கட்டுகள் செய்தான். பின்பு அவன் பழைய பெட்டிகளை வாங்கி, மேசையை செய்தான். ஒரு நாள் நான் "அவர்கள் எப்படியிருக்கிறார்கள் என்று பார்த்துவிட்டு வரலாம்" என்று எண்ணினேன்.

அதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு நான் ஈ. வி. நைட் என்பவரின் மகளை ஈ.டி. ஸ்லைடர் என்பவரின் மகனுக்கு திருமணம் செய்து வைத்தேன். ஓஹையோவிலுள்ள மிகப் பெரிய பணக்காரர்களில் ஒருவர் ஈ.வி. நைட்

ஆவார். அவர் முன்கூட்டி உண்டாக்கும் கான்கிரீட் பலகைகளைக் கொண்டு வீடு கட்டும் (Prefab houses) தொழிற்சாலை ஒன்றை நடத்துகிறார். திரு. ஈ.டி. ஸ்லைடர் என்பவர் மணல், கருங்கல் ஜல்லி (gravel) போன்றவைகளை விற்கும் கம்பெனியின் அதிபர். இருவருமே கோடீஸ்வரரின் பிள்ளைகள். அவர்கள் திருமணத்தை நான் நடத்தி வைத்தேன்.

அதை நடத்துவதற்காக நான் ஓரிடத்திற்குச் சென்று பயிற்சி எடுத்துக் கொண்டேன். ஒரு அறைக்கு சென்று தலையணையின் மேல் முழங்கால் படிவதும், அந்த ஆடம்பரங்கள் அனைத்தும் நான் முன்கூட்டியே செய்து பார்த்து, பின்பு அவர்களுடைய திருமணத்தை நடத்த

வேண்டியதாயிற்று. திருமணம் முடிந்து அவர்கள் வெளியே வந்தபோது... இந்த ஏழை தம்பதிகளும் ஒரு பழைய அறையில் நின்று கொண்டு – அங்கு எங்களுக்கு ஒரு சிறு படுக்கை இருந்தது. அதே திருமண ஒழுங்கின்படி விவாகம் செய்து கொண்டனர்.

40. இந்த பணக்காரத் தம்பதிகளை விஜயம் செய்து விட்டு வரலாமென்று ஒரு நாள் புறப்பட்டுச் சென்றேன். அவர்கள் வேலை செய்ய வேண்டிய அவசியமில்லை. அவர்களுடைய பெற்றோர்கள் கோடீஸ்வரர்கள். அவர்களுக்கு ஒரு நல்ல வீடு இருந்தது. வெளிப்படையாகக் கூறினால், ஈ.வி.நைட்டின் மாளிகையிலுள்ள கதவுகளின் கைப்பிடிகள் அனைத்துமே பதினான்கு

காரட் தங்கத்தினால் ஆனவை. அதிலிருந்து அவர்கள் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தனர் என்பதை நீங்கள் அறியலாம். அவர்கள் வேலை செய்ய வேண்டிய அவசியமேயில்லை. அவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஒரு நல்ல காடிலாக் கார் கொடுக்கப்பட்டது. அவர்களிருவரும் தங்கள் பெற்றோருக்கு ஒரே பிள்ளை அவர்களுக்கு வேண்டிய அனைத்தும் இருந்தது.

ஒரு நாள் அவர்களுடைய வீட்டுக்கு நான் சென்றிருந்தேன். நான் எப்படி அவர்களுக்கு அறிமுகமானேன் என்றால். அவர்களுடைய நண்பர்களில் ஒருவர் எனக்கு நெருங்கிய நண்பர் ஆவார். நாங்கள் அனைவரும் ஒன்றாகப் பழகி நண்பர்களானோம்,

அப்படித்தான் நான் அறிமுகமானேன். அப்பொழுது, நான் அவர்களுக்கு விவாகம் செய்து வைக்க வேண்டுமென்று என்னைக் கேட்டுக் கொண்டனர்.

41. எனவே அவர்களை நான் காணச் சென்றேன். என் பழைய ஃபோர்ட் காரை விட்டு வெளியே இறங்கி, படிகளில் ஏறி அருகே சென்ற போது, அவர்களுடைய சத்தம் எனக்கு கேட்டது. அவர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் ஒருவருக்கொருவர் பொறாமை கொண்டிருந்தனர். அவர்கள் நடனமாடச் சென்றிருந்தனர். அவள் சிறந்த அழகி, அழகு ராணிகளில் ஒருவள். அவள் அழகு போட்டிகளில் அநேக

விருதுகளைப் பெற்று, சில கார்களையும் கூட பரிசாக வென்றவள்.

அவர்களை நான் பார்த்த போது, அவன் ஒரு மூலையிலும், அவள் வேறொரு மூலையிலும் உட்கார்ந்து கொண்டு, அவளுடன் நடனமாடின ஒரு பையனை அல்லது ஒரு பெண்ணைக் குறித்தோ வீண்வாதம் செய்து கொண்டிருந்தனர். அவர்கள் என்னைக் கண்டவுடன் வேகமாக குதித்தெழுந்து, ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு கதவண்டையில் வந்து, “ஹல்லோ சகோ, பிரான்ஹாமே எப்படியிருக்கிறீர்கள்?” என்று கேட்டனர்.

நான், “நன்றாயிருக்கிறேன். நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்?” என்று கேட்டேன்.

அவன், “ஓ, நாங்கள் மிகவும் சந்தோஷமாக இருக்கிறோம். இல்லையா, தேனே?” என்றான்.

அவள், “ஆம் அன்பே” என்றாள்.

42. பாருங்கள், உண்மையாயிராத ஒன்றை நீங்கள் இருப்பது போல் காண்பித்து பாசாங்கு செய்கிறீர்கள். தீட்டப்பட்ட சித்திரத்தினால் உங்களுக்கு வெப்பம் கிடைக்காது. இங்குள்ள சில சபைகள், ஆயிரம் அல்லது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்த பெந்தெகொஸ்தேயை வர்ணச் சித்திரமாக்க முயல்வது போன்று. வர்ணச் சித்திரத் தீயிலிருந்து உங்களுக்கு வெப்பம் கிடைக்காது. அன்று இருந்தது போலவே இன்றும் பெந்தெகொஸ்தே உண்மையாயுள்ளது. அக்கினி இன்னும் விழுந்து

கொண்டிருக்கிறது. அது வர்ணச் சித்திரத்தின் நெருப்பல்ல. அது உண்மையான அக்கினி. அப்படித்தான் அவர்கள் இருந்தனர். அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ எனக்கு பிரியமில்லை.

43. மலைச் சிகரத்துக்கு மறுபுறம் ஆற்றங்கரையில் அந்த மற்ற தம்பதிகள் வாழ்ந்து வந்தனர். ஒரு சினிக்கிழமை பகல் நான் மெல்ல நழுவிச் சென்று, அவர்கள் எப்படியிருக்கிறார்கள் என்று பார்த்து வரலாம் என்று எண்ணினேன். என் முகம் அழுக்கு படிந்திருந்தது. நான் உடுத்தியிருக்கு பணி உடையும் அழுக்காயிருந்தது. என்னிடம் வேலை சாமான்கள் இருந்தன. மின்னலினால் எத்தனை இன்ஸலேட்டர்கள் சேதமடைந்துள்ளன என்று

ஆற்றங்கரையிலுள்ள மின்சாரக் கம்பிகளின் வழியாக நடந்து பார்வையிடுவது போல், நான் மெல்ல நழுவி அவர்களைக் காணலாமென்று எண்ணினேன். நான் சென்ற போது, அந்த பழைய ஷெவர்லே கார் முன்பாகத்தில் நின்று கொண்டிருந்தது. அதுதான் அவர்கள் விவாகத்தை நடத்தி வைத்து ஏறக்குறைய ஒரு ஆண்டு கழித்து, அங்கு... கதவு திறந்திருந்தது, அவர்கள் உரையாடுவதை என்னால் கேட்க முடிந்தது.

அப்படிக் கூறுவது மாய்மாலம் எனவே அவர்கள் என்ன உரையாடுகின்றனர் என்பதை தெளிவாகக் கேட்டு அறிந்து கொள்ள வேண்டுமெனக் கருதி, நான் அருகில் சென்றேன். நான் ஒன்றை நன்கு

கண்டு கொண்டு, அதன் பின்பு என்ன பேசுகிறேன் என்பதை அறிந்திருக்கிறேன் என்னும் நிச்சயத்தை உடையவனாயிருக்க விரும்புகிறேன். தேவனுடைய வார்த்தையைக் குறித்த விஷயத்திலும் நான் அப்படித்தான் செய்கிறேன். அது சத்தியம் தானா? இல்லையா? அவர் தமது வார்த்தையை நிறைவேற்றுவாரா? அவர் வார்த்தையை எப்பொழுதும் நிறைவேற்றி வருகிறாரா? போன்றவைகள். அவர் தமது வார்த்தையை நிறைவேற்றாமல் போனால், அவர் தேவன் அல்ல பாருங்கள். அவர் வார்த்தையை நிறைவேற்றினால் அவர் தேவன், பாருங்கள்.

44. அவர்கள் எப்படியிருக்கிறார்கள் என்று அறிய விரும்பினேன். எனவே

அவர்களுடைய வீட்டின் பக்கத்தில் மெல்ல நழுவிச் சென்றேன். அப்பொழுது அவன் “தேனே, அதை உனக்கு எப்படியாவது வாங்கித் தர வேண்டுமென்று நினைத்தேன்” என்று கூறுவதைக் கேட்டேன்.

அவள், “இனியவரே, பாருங்கள். இப்பொழுது எனக்கு இருக்கிற உடை போதும், அது மிகவும் நன்றதாயிருக்கிறது. உமது விருப்பத்தை மெச்சுகிறேன். ஆனால் பாருங்கள்...” என்றாள்.

நான் அந்த பெட்டிக்காரின் கதவு திறந்திருக்கும் பக்கம் சென்றால், அங்குள்ள பிளவின் (Crack) வழியாக பார்க்கலாமே என்று கருதி, வீட்டைச் சுற்றி மறுபக்கம் மெல்லச் சென்றேன். அவன் அங்கு உட்கார்ந்து

கொண்டிருந்தான். அவள் அவன் மடியில் அமர்ந்திருந்தாள். அவனுடைய கை அவள் தோளின் மேலும், அவளுடைய கை அவனுடைய தொளின் மேலும் இருந்தது அவன் சிறு துவாரம் கொண்ட பழைய தொப்பி ஒன்றை வெளியே எடுத்து அதிலிருந்த தன் ஊதியத்தை மேசையின் மேல் கொட்டினான். அவன், "மளிகை சாமான்களுக்கு இவ்வளவு, காப்பீட்டுக்காக இவ்வளவு, காருக்காக இவ்வளவு என்று பங்கிட்டான். அவர்களால் செலவை சமாளிக்க முடியவில்லை". என்ன நடந்ததென்றால், அவன் கடை சன்னலில் ஒரு உடையைக் கண்டான் (அவன் அதை இரண்டு வாரங்களாக பார்த்துக் கொண்டே வந்தான்). அதன் விலை ஒரு டாலர், அதை அவனுடைய

மனைவிக்கு வாங்கித் தர விரும்பினான். அவன் தேனே, "அதை அணிந்து கொண்டால், நீ மிகவும் அழகாயிருப்பாய்" என்றான்.

அவளோ, "தேனே, எனக்கு ஒரு உடை இருக்கிறதே, எனக்கு அது தேவையில்லை" என்றாள்.

பார்த்தீர்களா? அந்த சிறு ராணி...

45. நான் பின்னால் அடி எடுத்து வைத்து திரும்பிப் பார்த்தேன். அந்த செல்வந்தரின் வீட்டின் உச்சியிலுள்ள கோபுரத்தை என்னால் காண முடிந்தது. அங்கு நான் நின்று கொண்டு சில நிமிடங்கள் அதையே உற்று நோக்கிக் கொண்டிருந்தேன். "உண்மையில் யார் பணக்காரன்?" என்று நான் சிந்தித்தேன். நான், "பில் பிரான்ஹாமே, இவ்விரண்டில் ஒரு இடத்தை நீ

தெரிந்து கொள்ள வேண்டுமானால், நீ எந்த இடத்துக்கு செல்வாய்?" என்று மனதில் எண்ணினேன்.

மலையின் மேலுள்ள அந்த அழகான மாளிகையை நான் தெரிந்துகொள்ள மாட்டேன். ஆனால் கீழேயுள்ள வீட்டைப் பேணிப் பாதுகாக்கும் பெண்ணைத் தெரிந்துகொள்வேன் – என்னை நேசித்து, என்னுடன் தங்கி, எனக்காக ஒரு நல்ல குடும்பத்தை அமைத்து, தனக்கு வேண்டிய பொருள்களுக்காக என் இரத்தத்தை உறிஞ்சாமல் என்னுடன் தங்கி என்னில் ஒரு பாகமாக இருப்பவளை.

46. அந்த சம்பவம் எப்பொழுதும் என் இருதயத்தில் நிலை கொண்டுள்ளது. ஒருவன் அழகுள்ள

பெண்ணைத் தெரிந்து கொண்டான். மற்றவன் பண்பைத் தெரிந்து கொண்டான். அதைதான் நீங்களும் தெரிந்து கொள்ள வேண்டும். முதலாவதாக அவளிடம் பண்பு உள்ளதா என்று பாருங்கள். அதன் பின்பு அவளை நீங்கள் நேசித்தால், மிகவும் நலமாயிருக்கும்.

★★★★★

# அன்பு எல்லாவற்றையும் ஜெயம்கொண்டு விடுகிறது

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: காலத்தால் பரீட்சிக்கப்பட்ட தேவனுடைய ஞாபகச் சின்னங்கள்,

ஆகஸ்டு 18, 1957, ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

27. மனந்தளர்ந்து போய், இருதயம் உடைந்து போன நிலையிலிருந்த ஒரு வாலிப பெண்ணிடம் சற்று முன்பு பேசிக் கொண்டிருந்தேன். ஒரு பெண்ணும் ஒரு மனிதனும் எவ்வாறு பிரியாமல் இருக்கிறார்கள் என்பதைக் குறித்து அவளிடம் பேச முயற்சித்துக் கொண்டிருந்தேன், அவர்கள் ஒரே சிந்தையை உடைய நபர்களாக (same-self person) இருக்கிறார்கள். மனிதன் உண்டாக்கிக் கொண்டான்... தேவன் மனிதனை, ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார்; அவன் மனிதனாக இருந்தான். அது சரியே. பிறகு அவர்

அவர்களை மாம்சத்தில் வேறுபிரித்து, அவர்களை வித்தியாசமாக உண்டாக்கினார், ஆனால் அவர்களை ஒன்றாக இணைத்து, ஒன்றாக அவர்களுடைய பிள்ளைகளை பெற்றெடுக்கச் செய்தார். எனவே பலமுள்ளவனும் கப்பலோட்டியுமாகிய மனிதனும், மனிதனுடைய அன்பான பாகமாகிய பெண்ணும். எனவே, அவர்கள் ஒன்றாகவே இருக்கிறார்கள். அது... தேவன் அவர்களைப் பிரித்தார். ஆனால் அவர்கள் இருவரும் அந்த அதே நபராகவே இருந்தார்கள், ம-னி-த-ன். ஸ்திரீயானவன், மனுஷி (wo-man) என்று அழைக்கப்பட்டாள், அது சரியே, ஏனென்றால் அவள் மனிதனிடமிருந்து எடுக்கப்பட்டவளாக இருந்தாள். அவள் மனிதனுடைய ஒரு பாகமாக இருக்கிறாள். ஆனால் இங்கே ஜீவியத்தில், மாம்சத்தில், அவர்கள் தனித்தனியாக பிரிந்திருந்தார்கள்

(separated). ஆவியிலோ அவர்கள் ஒருவராயிருக்கிறார்கள்.

28. மனிதர்கள் தங்கள் மனைவியின் பேரிலுள்ள தங்கள் அன்பை இழந்து வருவதைக் குறித்தும், அவர்கள் இனிய இருதயமாக இருந்த போது, அவர்கள் அன்புகூர்ந்தது போன்று அவர்கள் நேசிக்காதவர்களாக இருப்பதைக் குறித்தும் பேசிக் கொண்டிருந்தோம். உங்களுக்கு அவமானம். நீங்கள் அதைச் செய்யத்தான் வேண்டும். அவள் எப்போதுமே உங்கள் இனிய இருதயமாக இருக்கிறாள். முற்றிலுமாக. அவள் இருக்க வேண்டிய பாகம் அதுதான். நீங்கள் அவ்விதமாகத்தான் அவளை நடத்த வேண்டும். ஓ, அந்தச் சிறிய தேனிலவு நிறுத்தப்பட ஒருபோதும் அனுமதிக்காதீர்கள், ஏனென்றால் அது பரலோகத்தில் இருக்கப் போவதில்லை. அங்கே, பரிபூரணமாக ஒன்றாகவே

இருக்கப் போகிறது. அது சரியே. எனவே எல்லாரும்...

29. நல்லது, சில பெண்கள், அதற்கு, "ஆமென்" என்று கூற வேண்டும் என்பது போன்று தோன்றுகிறது. "நீர் எப்போதுமே ஸ்திரீகளை கடுமையாக திட்டிக்கொண்டும், அவ்விதமாகப் பேசிக் கொண்டும் இருக்கிறீரே" என்று நான் ஒருபோதும் - ஒருபோதும் கேட்க அனுமதிக்காதீர்கள். சகோதரி ஹிக்கர்ஸன் அவர்களே, அல்லது அங்கே பின்னாலிருக்கும் யாராவது ஒருவர், நீங்கள் ஏன் ஏதாவது கூறவில்லை, ஏன் கூறவில்லை...? நீங்கள் ஏதாவது கூறினீர்களா? [சகோதரி காக்ஸ் அவர்கள், "ஆமென்" என்று கூறுகிறார்கள் - ஆசிரியர்.] சகோதரி காக்ஸ் அவர்களே, உங்களுக்கு நன்றி. அது மிகவும் நல்லது. சகோதரன் காக்ஸ் அவர்களே, நீர் இப்பொழுது எங்கேயிருந்தாலும், அது உமக்கானது. சரி. ஆம், ஐயா.

30. ஒருவரையொருவர் கனம்பண்ண நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. எப்போதுமே இனிய இருதயங்களாக இருங்கள். அது நின்றுபோக ஒருபோதும் அனுமதிக்க வேண்டாம்.

31. கொஞ்ச காலத்திற்கு முன்பு, ஒரு கத்தோலிக்க பையன் என்னிடம் வந்தான். அவனுடைய மனைவி பிரிந்து போயிருந்தாள். அவன், "பில்லி அவர்களே, நான் உம்மிடம் வருவதை வெறுக்கிறேன்; நான் ஒரு கத்தோலிக்கன், நீர் ஒரு புரட்டஸ்டன்ட். சற்று முன்பு, பாதிரியார் என்னை எனது வீட்டை விட்டு விரைந்தோடி வரச் செய்தார்" என்றான்.

நான், "ஹாம், என்ன விஷயம்" என்று கேட்டேன்.

32. அவன், "நல்லது, அவர் என்னிடம் சொன்னார். நான் இரவில் கொஞ்சம் குடிப்பதுண்டு, நான் கடினமாக வேலை

செய்கிறேன். என்னுடைய மனைவியோ, நான் ஒவ்வொரு இரவும் உள்ளே வந்து, அவளை முத்தமிட்டு, அவளைக் கட்டி அணைக்க வேண்டுமென்று நினைக்கிறாள், நாங்கள் விவாகம் பண்ண ஆயத்தமாக இருந்தது போன்று உணர்ச்சிகரமாக முத்தமிட்டுக்கொண்டேயிருக்க வேண்டுமென்று நினைக்கிறாள். நாங்கள் விவாகம் செய்து, எங்களுக்கு ஒரு கூட்டம் குழந்தைகளும் இருக்கிறார்கள். நாங்கள், ... நேரம் அது தான்" என்று கூறினான்.

33. நான், "ஹூப், ஒரு நிமிடம் பொறு, பையனே. நீ தவறாக இருக்கிறாய். நீ தவறாகத்தான் இருக்கிறாய். அது நீ விவாகம் பண்ணுவதற்கு முன்பு இருந்தது போன்று அதேவிதமாகத்தான் இருக்கிறது. புரிகிறதா? நீ எப்போதுமே அதை நினைவில் கொள்ள வேண்டும். அவளுக்கு இப்போது 40 வயது ஆகிறது, உன்னுடைய

கவனிப்பு உண்மையாகவே தேவைப்படும் நேரம் இதுவே” என்று கூறினேன்.

34. இவ்வாறாக, அவர்கள் விவாகரத்து நீதிமன்றத்தைக் கொண்டிருந்தார்கள். அவன், “நான் என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை” என்று கூறினான்.

35. நான், “போய், அவளைக் கூப்பிடு. நான் ஒரு புரட்டஸ்டன்டாக, அங்கே போவேன் என்றால், அவள் என்னை ஏற்றுக்கொள்ள மாட்டாள். ஆனால் நான்... புரிகிறதா?” என்றேன்.

“ஒ, அவளுக்கு உம்மைப் பிடிக்கும்” என்றான்.

36. நான், “போய் அவளைக் கூப்பிட்டு, நீ உன்னுடைய மனதை மாற்றிக் கொண்டு விட்டதாக அவளிடம் சொல்” என்று கூறினேன்.

37. எனவே அடுத்த நாள், நான் நீதிபதியை அழைத்து அவரிடம்

கூறியிருந்தேன். நான் இந்தப் பையனிடம், “நீதிபதி உங்களிடம் மறுபடி ஆலோசிக்கப் போகும் இடத்தின் தரையின் கீழே நான் உட்கார்ந்து கொண்டு, உங்களுக்காக ஜெபித்துக் கொண்டிருப்பேன். அவளிடம் அதைக் குறித்துக் கூறாதே” என்றேன்.

“சரி.”

38. எனவே, நான் அங்கேயிருந்து, ஜெபித்துக் கொண்டிருந்தேன். சற்று கழிந்து, ஏதோவொரு சிறிய மடக்கொலி (clicking) அந்தப் படியின் கீழே இறங்கி வருவதை நான் கேட்டேன், இதோ அவர்கள் தங்கள் கரங்களை ஒருவரைச் சுற்றி ஒருவர் போட்டுக்கொண்டு, முழுவதும் சிரித்தபடி வருகிறார்கள், உங்களுக்குத் தெரியும். அவன் சொன்னான்... நான், “நல்லது, ஹலோ!” என்றேன்.

39. அவன், “சகோதரன் பிரன்ஹாமே, நான் உம்மைக் கண்டதுமுதல், கொஞ்ச

நேரம் தான் ஆகிறது!" என்றான். ஆமாம், முப்பது நிமிடங்கள், பாருங்கள். "நான் உம்மைக் கண்டது முதற்கொண்டு கொஞ்ச நேரத்தில்!"

40. அவளோ, "ஏன், சங்கை. பிரன்ஹாம் அவர்களே, நீண்ட காலமாக நான் உம்மைக் காணவில்லை! உம்மை மறுபடியும் காண்பதில் மகிழ்ச்சி!" என்றாள்.

41. நான், "உங்களுக்கு நன்றி. ஏன், நீங்கள் இனிய இருதங்களாக இருந்தது போன்று தோன்றுகிறதே" என்றேன்.

"ஓ," "நாங்கள் திருப்தியாக இருக்கிறோம. இல்லையா, தேனே?" என்றான்.

அவள், "ஆம், நாம் திருப்தியாகத்தான் இருக்கிறோம், அன்பே" என்றாள். மேலும் நான்... அவள், "சங்கை அவர்களே,

ஒருநாள் எங்களைக் காண வாருங்கள்" என்றாள்.

42. நான், "உங்களுக்கு மிகவும் நன்றி. நீங்கள் சென்று வாருங்கள்" என்றேன். கடந்து செல்லும்போது, அந்தப் பையன் திரும்பிப் பார்த்து, *அந்த* விதமாக, கை அசைத்துக் காண்பித்தான். அவை எல்லாமே சம்பவித்தது. அது சரியே.

43. அன்பு எல்லாவற்றையும் ஜெயம்கொண்டு விடுகிறது. அது சரியே, வெறுமனே-வெறுமனே அன்பு. நீங்கள் உங்களுடைய எல்லா அடையாளங்களையும் அத்தாட்சிகளையும் கொண்டிருக்கலாம், ஆனால் எனக்கு வெறுமனே அன்பைக் கொடுங்கள். அது-அதுவே எனக்கு அதைத் தீர்த்து வைக்கிறது. ஓ, என்னே!

*அருமையான மரிக்கும் ஆட்டுக்குட்டியே,*

*உம் விலையேறப்பெற்ற இரத்தம்*

எக்காலத்தும் அதன் வல்லமையை இழந்து போவதில்லை,

மீட்கும்தொகை கொடுத்து மீட்கப்பட்ட தேவனுடைய சபையிலுள்ள எல்லோரும்

இனி பாவமே செய்யாதபடி இரட்சிக்கப்படும் வரைக்கும். (பாருங்கள்?)

உம் காயத்திலிருந்து பெருக்கெடுத்து வரும் நதியை

நான் விசுவாசத்தால் கண்டமுதற்கு,

மீட்கும் அன்பே என் பொருளாக உள்ளது,

நான் மரிக்கும் வரை அவ்வாறே இருக்கும்.

அது சரியே. ஓ, அற்புதம்!

★★★★★

# பூமியில் அதிக விலையேறப்பெற்ற காரியம்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

[இது சகோ.பிரன்ஹாம் பேசிய "**ஒரே சபையில் ஒரே தேவனின் ஒருமைப்பாடு**, 58-1221 E" என்ற செய்தியிலிருந்து எடுக்கப்பட்டது.]

கொஞ்ச காலத்திற்கு முன்பு ஒரு... இங்கே மேலே இந்தியானாவில் உள்ள ஒரு பண்ணையில் வளர்க்கப்பட்ட இரண்டு வாலிபர்கள் இருந்தார்கள். அவர்கள் எவ்வளவு கூடுமோ அவ்வளவு ஏழைகளாகவும், விவசாயம் செய்கிற வாலிபர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் ஒன்றாக வளர்ந்தார்கள். ஒரு நாள் அவர்களில் ஒருவன் விவாகம் பண்ணினான். அதற்கும் ஒரு சில நாட்கள் கழித்து, மற்றவன் விவாகம் பண்ணினான்.

மேலும் அவர்களில் ஒருவன் ஜீவிக்கும்படி பட்டணத்திற்குள் சென்றான்.

நிறுவன பங்குகளை வாங்கி விற்பனை செய்யும் சந்தைகளை (stock markets) நடத்தத் துவங்கி, அவனுடைய சிறுபிள்ளை பருவ போதகங்களிலிருந்து (childhood teachings) விலகிப் போய், தவறான காரியங்களுக்குள் போய் விட்டான். அவன் அவைகளை நடத்தி, இறுதியில் அவன் ஒரு கோடீஸ்வரனாக ஆகும் அளவுக்கு பெரும் பணக்காரனாகி விட்டான். மேலும் அவன் சிகாகோவுக்கு இடம்பெயர்ந்து, மகத்தான வீதிகளில் ஒன்றைப் பெற்று, தனக்கென ஒரு மாளிகையைக் கட்டினான். அவனும் அவனுடைய மனைவியும் இரவு கேளிக்கை விடுதிகளுக்கு (night clubs) ஓடி, மதுவைக் குடித்து, இரவு முழுவதும் போதையில் மயங்கிக் கிடந்தனர். அவர்கள் விரும்புகிற எதையும் அவர்களுக்கு நிறைவேற்றிக் கொடுக்க அவர்களுக்கு சமையல்காரர்களும் மற்றும் ஒவ்வொன்றும்

இருந்தனர். மேலும் அவர்கள் நன்றாக வாழ்ந்து கொண்டிருப்பதாக எண்ணினர்.

ஆனால் அதைப் போன்று ஜீவிக்கிற ஒரு மனிதனுக்கு சமாதானம் இருக்காது. ஒரு குழப்பமடைந்த இருதயத்திற்கு சமாதானம் இருக்காது. ஒரு பாவமான இருதயத்திற்கு சமாதானம் இருக்க முடியாது. ஒரு மனிதன் குடியை விரும்பி, அதை “வாழ்க்கை” என்று அழைத்து, தான் ஒரு பெரிய நேரத்தைக் கொண்டிருப்பதாக எண்ணினால், அது அவனுடைய வெறுமையைக் காட்டுகிறது. ஒரு மனிதனை எடுத்து, ஒரு மில்லியன் டாலர்கள் அவன் பெறும்படி செய்யுங்கள், அவன் இரண்டு மில்லியன் டாலர்களை விரும்புவான். ஒரு விருந்துக்குச் சென்று, ஒரு மதுவை குடிக்கும் ஒரு மனிதனை இன்றிரவு எடுத்துக் கொள்ளுங்கள், அவன் வேறொன்றை விரும்புவான். ஒரு

மனிதனை எடுத்துக் கொள்ளுங்கள், அவன் ஒருமுறை அவனுடைய மனைவிக்கு உண்மையில்லாதவனாக ஜீவிக்கிறான், அவன் மீண்டும் அவ்விதமே ஜீவிப்பான்; இதற்கு எதிர்மாறாகவும் (அப்படியே). பாருங்கள், அது ஏதோவொன்றாக இருக்கிறது, மேலும் அவன் ஒருபோதும் திருப்தியடைவதேயில்லை. அவன் தன்னுடைய கைகளில் ஒரு மில்லியன் டாலர்களோ, அல்லது பத்து மில்லியன் டாலர்களோ கொண்டிருக்கலாம்; அவனோ குடிபோதையில் மயங்கி, இரவில் படுத்துக் கிடப்பான்; அடுத்த நாள் காலையில், அவன் எழுந்து மனதை விட்டு அகலாத தொல்லை கொடுக்கும் எண்ணங்களால் அவதிப்பட்டு, பெருங்கவலை கொண்டு, மனக்கலக்கமான சிந்தையைக் கொண்டிருப்பான். நீங்கள் அதையா சமாதானம் என்று அழைப்பீர்கள்? அது சமாதானம் அல்ல.

**ஆனால் ஒரு மனிதனுக்கு தன்னுடைய தலைசாய்க்க ஒரு தலையணை கூட இல்லாமல் இருக்கலாம், அவனுக்கு ஒரு ஜோடி நல்ல காலணிகள் கூட இல்லாமல் இருக்கலாம், அல்லது தன்னுடைய வீட்டில் ஒரு நல்ல சாப்பாடு கூட இல்லாமல் இருக்கலாம்; ஆனால் தேவன் அவனுடைய இருதயத்தில் ஆளுகை செய்வாரானால், அவன் சந்தோஷமாக படுக்கைக்குச் சென்று சந்தோஷமாக எழும்புவான். அது ஒரு நீடித்த சமாதானம். அது தேவன் செய்கிற ஏதோவொன்றாக உள்ளது.**

இந்த மனிதனோ அந்த போதனையை மறந்து விட்டிருந்தான். அவன் சூதாடும்படிக்கு போனான். கிறிஸ்துமஸ் நேரம் வந்தது. அவனுடைய நண்பனைக் குறித்து நினைத்தான், எனவே அவன் ஒரு

கடிதத்தை அவனுக்கு எழுதினான். பணக்காரனாயிருந்த அவர்களில் ஒருவனுடைய பெயர் ஜிம் என்பதாகும், ஏழையாயிருந்தவனுடைய பெயர் ஜான் என்பதாகும். அவன் இவனுக்கு ஒரு கடிதம் எழுதினான், அவன், “ஜான், நீ விடுமுறை நாட்களில் என்னைப் பார்க்கும்படி வர விரும்புகிறேன். நான் உன்னைச் சந்தித்து மீண்டும் உன்னிடம் பேச விரும்புகிறேன். நான் உன்னை அநேக வருடங்களாக பார்க்கவேயில்லை” என்று கூறி (எழுதினான்).

இவனோ, “ஜிம், நான் வர விரும்புகிறேன், ஆனால் என்னால் வரமுடியாது. வருவதற்கு என்னிடம் பணமில்லை” என்று கூறி பதில் எழுதினான்.

ஒரு சில நாட்களில், தபாலில் ஒரு காசோலை வந்தது, “வந்து விடு!

எப்படியாயினும் நீ வரும்படி நான் விரும்புகிறேன்" என்று எழுதப்பட்டிருந்தது. எனவே நாட்டுப்புற இளைஞனான ஜான் ஆயத்தமானான், ஒரு நல்ல சுத்தமான ஒரு ஜோடி மேலாடைகளைகளையும், அவனுடைய வைக்கோல் தொப்பியையும் (kady hat), ஒரு வித்தியாசமான நிறமுடைய அவனுடைய சிறு கோட்டையும் அணிந்து கொண்டு, இரயில் ஏறினான்.

அவன் அங்கு போய் சேர்ந்த போது, அங்கே ஒரு ஓட்டுனர் அவனை சந்திக்கும்படிக்கு, ஒரு பெரிய விலை மதிப்பு மிக்க சொகுசு காருடன் உட்கார்ந்து கொண்டிருந்தான். எவ்வாறு செயல்படுவது என்று அவனுக்குத் தெரியவில்லை. அவன் இந்த சொகுசு காரில் ஏறி, அவனுடைய தொப்பியை தன்னுடைய கரத்தில் பிடித்தவாறே சுற்றிலும் நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தான். சிகாகோவிலுள்ள ஒரு

மகத்தான மாளிகைக்கு காரோட்டிச் செல்லப்பட்டான்.

வெளியேறி கதவருகில் சென்று அழைப்பு மணியை ஒலித்தான். ஒரு வேலையாள் வெளியே வந்து, "ஐயா, தயவுசெய்து உங்களுடைய அட்டை" என்றான். அவனிடம் என்ன பேசிக் கொண்டிருந்தான் என்பது அவனுக்குத் தெரியவில்லை. அவன் தன்னுடைய தொப்பியை அவனிடம் கொடுத்தான். அவன்... வரவேற்பு அட்டை இல்லை என்பதைக் குறித்து அவனுக்கு எதுவுமே தெரியவில்லை. இவ்வுலக பொருட்கள் அதிகமாக அவனிடம் கிடையாது. அவன், "உம்முடைய அட்டை எனக்குத் தேவைப்படுகிறது" என்றான்.

அவன், "ஐயா, நீர் எதைக் குறித்து பேசிக் கொண்டிருக்கிறீர் என்பது எனக்குத் தெரியவில்லை" என்றான். "நான்

வரவேண்டுமென்று ஜிம் (கடிதம்) அனுப்பியிருந்தான். எனக்குத் தெரிந்ததெல்லாம் அது தான்” என்றான்.

எனவே அவன் திரும்பிச் சென்று தன்னுடைய கூட்டாளியிடம் (partner) கூறினான், அவன் இன்னும் படுக்கையை விட்டு வெளியே வந்திருக்கவில்லை. அவன், “விநோதமாக தோற்றமளிக்கிற ஒரு மனிதன் அங்கே வாசலில் நின்று கொண்டிருக்கிறான்” என்றான். “அவன் உடையுடுத்தியிருக்கிறான்… அவனைப் போன்று உடையுடுத்தியுள்ள ஒரு மனிதனை நான் ஒருபோதும் கண்டதேயில்லை. மேலும் ஜிம் அவனிடம் (கடிதம்) அனுப்பினதாக அவன் கூறினான்” என்றான்.

அவன், “‘உள்ளே வா’ என்று அவனிடம் சொல்” என்றான்.

அவன் தன்னுடைய குளியலாடையுடன் நகர்ந்து, கீழே முகப்புக்கூடத்திற்கு (hall) இறங்கிச் சென்று, அவனுடைய இந்த பழைய நாட்டுப்புற நண்பனை சந்தித்து, அவனுடைய கரத்தைக் குலுக்கி, "ஜான், நான் உன்னைக் காண்பதில் எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கிறேன் என்பது உனக்குத் தெரியவில்லை!" என்றான்.

அந்தப் பழைய நாட்டுப்புற நண்பன் நின்றபடியே, அந்த அறையைச் சுற்றிலும் நோக்கிப் பார்த்து, "ஜிம், நீ நிச்சயமாகவே திரளான (செல்வத்தைப்) பெற்றிருக்கிறாய்" என்றான்.

அவன், "நான் உன்னைச் சுற்றிக் காண்பிக்க விரும்புகிறேன்" என்றான். அவன் அவனை மேல்மாடிக்கு அழைத்துச் சென்று, வெளியே அதிக அளவு சூரிய வெளிச்சம் உள்ளே புகுமாறு

கட்டப்பட்டிருந்த அந்த அறையின் (sun porch) ஜன்னல்களைத் திறந்தான்.

“மார்த்தா எங்கே?” என்றான்.

“ஓ, அவள் இன்னும் வரவில்லை. அவள் கடந்த இரவில் வெளியே இருந்தாள்” என்றான்.

“ஊ, நீங்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு – எவ்வாறு நேசிக்கிறீர்கள்?” என்றான்.

“ஓ, அதிகமாக அல்ல. ஜான், நீயும் கேட்டியும் (Katie) ஒருவருக்கொருவர் எவ்வாறு நேசிக்கிறீர்கள்?” என்று கேட்டான்.

“அருமையாக உள்ளது” என்றான்.

“ஓ, அவள் வீட்டிலா இருக்கிறாள்?” என்று கேட்டான்.

“ஆம், எங்களுக்கு ஏழு குழந்தைகள் உண்டு” என்றான். “உங்களுக்கு ஏதாவது

பிள்ளைகள் இருக்கிறார்களா?” என்று கேட்டான்.

“இல்லை. மார்த்தாளுக்கு எந்த பிள்ளையும் கிடையாது” என்றான். “எங்களுக்கு எந்த பிள்ளைகளும் இல்லாமல் இருப்பது நல்லது என்று அவள் நினைத்தாள்; சமுதாய வாழ்க்கையோடு தலையிடுதல். உனக்குத் தெரியும்” என்று கூறிவிட்டு, திரைகளைப் பின்னால் உயர்த்தி, “இங்கே பார்” என்றான். “அதோ அங்கேயுள்ள அந்த வங்கியை நீ காண்கிறாயா?” என்றான்.

அவன், “ஆம்” என்றான்.

“நான் அந்த வங்கியில் தலைமை அதிகாரியாக இருக்கிறேன்” என்றான். “அந்த இரயில் போக்குவரத்து கம்பெனியை நீ காண்கிறாயா?” என்று கேட்டான்.

“ஆம்.”

“நான் அதில் பத்து இலட்சம் டாலர்கள் பெறுமானமுள்ள பங்குகளைக் (shares) கொண்டிருக்கிறேன்” என்றான்.

மேலும் அவன் அங்கே கீழே நோக்கிப் பார்த்து, மகத்தான தோட்டங்களையும் மற்றும் ஒவ்வொன்றையும் கண்டான், அது காண்பதற்கு எவ்வளவு அழகாயிருந்தது. பழமையான ஜான் தன்னுடைய வைக்கோல் தொப்பியைக் கையில் வைத்துக் கொண்டு, சுற்றிலும் நோக்கியவாறு நின்று கொண்டிருந்தான். அவன், “ஜிம், அது அருமையானது. நீ அதைப் பெற்றிருக்கிறாய் என்பதற்காக நான் நிச்சயமாகவே நன்றியுள்ளவனாயிருக்கிறேன். நானும் கேட்டியும் அதிகம் பெற்றிருக்கவில்லை. நாங்கள் இன்னும் அங்கேயுள்ள சிறிய பழமையான தனித்தனியான விளம்பர பலகையால் செய்யப்பட்ட வீட்டில் வாழ்ந்து வருகிறோம்” என்றான். “எங்களிடம்

அதிகம் கிடையாது, ஆனால் நாங்கள் மிகவும் சந்தோஷமாக இருக்கிறோம்" என்றான்.

சிறிது கழிந்து ஒரு கூட்டம் கிறிஸ்துமஸ் கேரல் (carol) பாடுபவர்களின் சத்தம் உள்ளே வரத் தொடங்கியது.

அமைதியான இரவு, பரிசுத்தமான இரவு,

வாலிப கன்னித்தாயையும் பிள்ளையையும் சுற்றி

எல்லாம் அமைதியாகவும் பிரகாசமாகவும் உள்ளது,

பரிசுத்தமான குழந்தை மிகவும் மென்மையாகவும் சாந்தமாகவும் உள்ளது.

ஜிம் திரும்பி ஜானைப் பார்த்தான்; ஜான் ஜிம்மை நோக்கிப் பார்த்தான். "ஜான், நான் உன்னிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். நாம் பையன்களாக இருந்த

சமயம் உனக்கு ஞாபகம் உள்ளதா? நாம் வழக்கமாக அங்கே அந்த சாலையோரத்திலிருந்த அந்த சிறிய பழைமையான சிவப்பு நிற சபைக்கு போய், அவர்கள் பாடுகிற அந்தப் பழமையான நாட்டுப்புற பாடகர் குழுவின் பாடல்களைக் கேட்போமே?" என்றான்.

"ஆம்" என்றான்.

"நீ இன்னும் அங்கே போகிறாயா?" என்றான்.

"ஆம், நான் இன்னும் அதைச் சேர்ந்தவனாயிருக்கிறேன். இப்பொழுது நான் அங்கே ஒரு டீக்கனாக இருக்கிறேன். ஜிம், உன்னைக் குறித்து என்ன? இங்கே உனக்கு எவ்வளவு சொந்தமாக இருக்கிறது என்பதைக் குறித்து நீ பேசிக் கொண்டிருந்தாய். உனக்கு மேலேயுள்ள அந்தப் பாதையில் எவ்வளவு சொந்தமாக உள்ளது?" என்றான்.

“ஜான், நான் வருந்துகிறேன், எனக்கு மேலேயுள்ள அப்பாதையில் எனக்கு சொந்தமாக எதுவும் கிடையாது. ஒருவருடம் கிறிஸ்துமஸுக்கு சற்று முன்பு, நமக்கு எந்த காலணியும் இல்லாதிருந்தது ஞாபகம் உள்ளதா? நாம் கிறிஸ்துமஸிற்காக கொஞ்சம் பட்டாசுகள் பெற்றுக் கொள்வதில் அதிக ஆர்வமாய் இருந்தோமே. கிறிஸ்துமஸிற்காக கொஞ்சம் பட்டாசுகள் வாங்கும்படிக்கு, நாம் வெளியே சென்று, சில முயல்களைப் பிடிக்கும்படி கொஞ்சம் பெட்டி கண்ணிகளை வைத்தோமே. உன்னுடைய பெட்டிக் கண்ணியில் அந்தப் பெரிய காட்டு முயல்கள் இருந்த அந்த காலை வேளை உனக்கு ஞாபகம் உள்ளதா?” என்றான்.

ஜான், “ஆம், எனக்கு ஞாபகம் உள்ளது” என்றான்.

“நீ கொஞ்சம் பட்டாசுகள் வாங்கினாய். நீ சென்று கொஞ்சமானதைப் பெற்று, அவைகளை எனக்குப் பங்கிட்டுக் கொடுத்தாயே.”

அவன், “ஆம்” என்றான்.

“ஜான், நான் பெற்றிருந்த எதையும் உன்னோடு பங்கிட்டுக் கொள்வேன். ஆனால் நீ ஒரு காரியத்தை எனக்குப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டுமென நான் விரும்புகிறேன். நான் அந்த பழமையான தூசிபடிந்த சாலையில் மீண்டும் அந்த சிறிய பழமையான சபை மட்டுமாக வெறும்காலுடன் நடந்து, அந்த பாடல்குழுவினர் பாடி, அந்தப் பழைமை நாகரீகமான நாட்டுப்புற போதகர் பிரசங்கிக்கும்போது, ஜீவனுள்ள தேவனுடைய பிரசன்னத்தை உணரக் கூடுமானால், எனக்கு சொந்தமான எதையும் நான் கொடுத்துவிடுவேன். நான்

எதையும் கொடுத்துவிடுவேன். நான் மீண்டும் திரும்பி, நான் அந்த பழமையான சலையில் நடந்த போது நான் கொண்டிருந்த அந்த ஆசீர்வதிக்கப்பட்ட சமாதானத்தை கொண்டிருக்கக் கூடுமானால், எனக்கு சொந்தமான எல்லாவற்றையும், இரயில் போக்குவரத்தில் உள்ள ஒவ்வொரு பங்குகளையும், வங்கியிலுள்ள எல்லா பாகங்களையும், இந்த வீட்டையும், எல்லாவற்றையும் கொடுத்து விடுவேன்” என்றான்.

ஜான் அவனைச் சுற்றிலும் தன்னுடைய கரங்களைப் போட்டு அவனைப் பற்றிக் கொண்டான்; அவன், “ஐசுவரியமான மூன்று சாஸ்திரிகள் இருந்தனர். ஒரு சமயத்தில், இயேசு ஒரு குழந்தையாக இருந்த போது, அவர்கள் வந்து இயேசுவின் பாதத்தருகே எல்லாவற்றையும் வைத்தனர். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு

மன்னிப்பைப் பெற்றுக் கொண்டனர்” என்றான். அவன், “நான், என்றாலும் நான்... ஜிம், நீ செய்த இந்த எல்லா காரியங்களிலும் ஆசீர்வாதத்தோடு வியக்கத்தக்க விதத்தில் இருக்கிறாய் என்று நினைக்கிறேன். ஆனால் சரியாகச் சொன்னால், எனக்கு என்னுடைய மனைவியும் ஏழு பிள்ளைகளும் இருக்கிறார்கள், (நாங்கள்) அங்கே வைக்கோல் மெத்தையில் தூங்கி, அதில் ஜீவித்து வருகிறோம், (அப்படியிருந்தும்) ஜிம், நீ கொண்டிருக்கக்கூடிய உன்னுடைய எல்லா ஆடம்பரங்களையும் நீ கொண்டிருப்பதைக் காட்டிலும் என்னுடைய இருதயத்தில் சமாதானத்தைக் கொண்டிருக்கிறேன்” என்றான்.

அது சரிதான், நண்பர்களே. **செல்வ செழிப்பு என்பது டாலர்களால் அளவிடப்படக்கூடியது அல்ல. செல்வ செழிப்பானது பெரும் பெயர் புகழால்**

**அளவிடப்படக்கூடியது அல்ல. செல்வ செழிப்பு என்பது தேவனுடைய இராஜ்யம் மனுஷ இருதயத்திற்குள் வந்து, அவனுடைய உணர்ச்சியை மாற்றி, கிறிஸ்து இயேசுவில் அவனை ஒரு புது சிருஷ்டியாக உண்டாக்கி, அவனுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கும் போது இருப்பதாகும். அதுதான் பூமியிலேயே அதிக விலையேறப்பேற்ற காரியமாகும்.**

செய்தி: ஒரே சபையில் ஒரே தேவனின் ஒருமைப்பாடு, 58-1221 E, பத்தி எண் 116-142

★★★★★

அது அங்கேயுள்ள தேவனிடம் கொண்டிருக்கிற அன்போடு கூடிய ஒரு இருதயத்திலிருந்து வரவில்லை என்றால், அது ஒருபோதும் எங்குமே போகவே போகாது




வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: உன் வீட்டார்,

ஆகஸ்டு 8, 1961
வீட்டுக் கூட்டம், டிஃப்டன்,
ஜார்ஜியா, அமெரிக்கா

58. நான் என்னுடைய மனைவியை எவ்வளவாக நேசித்தேன் என்று நான் அன்றொரு நாள் அவளிடம் கூறிக் கொண்டிருந்தேன். ஆகையால், நான் இதைக் குறித்து பேச அவள் விரும்புகிறாள் என்று நான் நினைக்கவில்லை, ஆனால் நான் தனிப்பட்ட முறையில் அதைக் கூறினேன். எனவே என்னால்

இப்பொழுது வெளிப்படையாக அதைக் கூற முடியும் என்று நினைக்கிறேன். நான் அவளை எவ்வளவாக நேசித்தேன் என்றும், முதலாவது துவக்கம் முதற்கொண்டு நான் எப்போதுமே எவ்வளவாக அவளை நேசித்து வருகிறேன் என்றும் நான் அவளிடம் கூறிக் கொண்டிருந்தேன். நான், "அது எந்த வித்தியாசத்தையும் உண்டுபண்ணுவதில்லை..." என்றேன்.

59. அவள், "ஓ, பில்" என்றாள், அவள் எவ்வளவு... என்று கூறினாள். அவள் எப்படி பெருத்து (fat) வருகிறாள் என்பதைக் குறித்தும், அவளுடைய தலைமுடி

நரைத்துக் கொண்டிருப்பதைக் குறித்தும் தான் பேசிக் கொண்டிருந்தாள்.

நான், “தேனே, நீ அவ்வளவு பருமனாகவும், தலைமுடியே இல்லாமலும் இருக்கலாம், நான் அப்பொழுதும் இதேவிதமாகவே உன்னை நேசிப்பேன்” என்றேன். பாருங்கள்? ஏனென்றால் நீங்கள் யாரோ ஒருவரை நேசித்து, நீங்கள்-நீங்கள் அந்த நபரை சந்திக்க வேண்டுமானால், அங்கே ஏதோவொன்று சம்பவித்தாக வேண்டும். அந்த நபர் வேறொரு நபரை நேசித்தாலொழிய...

60. விவாகமாகாத வாலிப பெண் பிள்ளைகளே, இது உங்களுக்காகத் தான், (பாருங்கள்?) வாலிபர்களே, நீ நேசிக்கும் அந்த வாலிப பெண்ணை நீ சந்திக்கும் போது. அங்கே ஏதோவொன்று உள்ளது, நீ அவளை நேசிக்கிறாய் என்பது உனக்குத் தெரியும், அங்கே அதற்கு வேண்டியதெல்லாம் அவ்வளவு தான், அல்லது நீ அவனை நேசிக்கிறாய், அவன் அழகானவன் என்றோ அல்லது அவனுக்கு அழகில்லை என்றோ, அல்லது அவள் அழகானவள் என்றோ அல்லது அழகில்லாதவள் என்றோ நீங்கள் கவலைப்படுவதில்லை. அது காரியமில்லை, ஆனால் நீங்கள்

அதேவிதமாகவே அவர்களை நேசிக்கிறீர்கள். இப்பொழுது, நீங்கள் எச்சரிக்கையோடு இருப்பது நல்லது. நீங்கள் ஒருவிதத்தில் அங்கே அருகாமையில் இருக்கிறீர்கள், ஏனென்றால் அது - நீங்கள் அங்கேயிருக்கும் வீட்டிற்கு அருகாமையில் வந்து கொண்டிருக்கிறீர்கள்.

நான்... அது... அதற்கு வெளியே சார்ந்து, செய்யப்படும் ஒரு-ஒரு விவாகம் நிச்சயமாக விழுந்து போகும், அல்லது அது ஒருபோதுமே வெற்றிகரமாக இருக்காது. அவைகள் ஒருபோதும் சந்தோஷமாக இருக்கவே இருக்காது.

61. இப்பொழுது, நான் கூற விரும்புகிற ஒரு காரியத்திற்கு கொண்டு வரும்படி தான் நான் அதைக் கூறினேன்.

நண்பர்களே, அதே காரியத்திற்கு வெளியே ஏற்படும் ஒரு மனமாற்றமும் நீடித்து நிற்காது. அது தொடர்ந்து நீடித்து நிற்காது. நீங்கள் சபைக்குச் சென்று, நீங்கள், "நல்லது, நான் சபையைச் சேர்ந்து கொள்ளப் போகிறேன், நான் ஞானஸ்நானம் பண்ணப்படப் போகிறேன்" என்று கூறும் போது, **அது அங்கேயுள்ள தேவனிடம் கொண்டிருக்கிற அன்போடு கூடிய ஒரு இருதயத்திலிருந்து வரவில்லை**

**என்றால், அது ஒருபோதும் எங்குமே போகவே போகாது**. நீங்கள் வெறுமனே... நீங்கள் செய்வதெல்லாம் சபையைச் சேர்ந்து கொண்டு, ஞானஸ்நானம் பண்ணப்படுவது தான்.

ஆனால் நீங்கள் கிறிஸ்துவுக்குள் மனமாற்றமடைந்து, கிறிஸ்துவை நேசிக்கும் போது, நீங்கள் உங்கள் மனைவியையோ அல்லது உங்கள் கணவரையோ நம்புவது போன்று, நீங்கள் கிறிஸ்துவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தை அதிகரித்துக் கொள்கிறீர்கள். நீங்கள் அந்த விசுவாசத்தில் நடக்கும்படியான ஒரு விசுவாசத்தை சேர்த்து அதிகரித்துக் கொள்கிறீர்கள். எனக்குத் தெரியாது,

நீங்கள் அப்படியே - உங்களைக் குறித்து ஏதோவொன்றுள்ளது, அங்கே உங்களை நங்கூரமிடும் ஏதோவொன்றை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். நீங்கள் பாருங்கள்?

62. நல்லது, கிறிஸ்துவைக் குறித்தும் அதேவிதமாகத்தான். கிறிஸ்து என்ன கூறுகிறாரோ, அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்கள். நீங்கள் சரியாக அதனோடு தரித்திருக்கிறீர்கள். அந்த விதமாகத்தான்... அது உங்களை அதற்கு மேலாக உயர்த்துகிறது, தேவன் அதை சம்பவிக்கப் பண்ணி, “நீ கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், நீயும்

உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" என்ற தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறார்.

எனவே இப்பொழுது, நான் இதைக் கூற வேண்டுமென்று சற்று முன்பு தான் நினைத்தேன். நான்-நான் அதற்காக மிக அதிக நேரம் எடுத்துக் கொண்டு விட்டேன். அதைக் கூறுவதற்கு முப்பது நிமிடங்கள் எடுத்துக் கொண்டேன், ஆனால் நான் என்ன கூற விரும்பினேன் என்பதை இப்பொழுது நீங்கள் அறிந்து கொண்டீர்கள். அதுதான் அதுவாக உள்ளது.

★★★★★

# ஆனால் நீதியுள்ளவளே இரட்சிப்புக்கு அடுத்தபடியாக அவன் பெறக்கூடிய மிகவும் நன்மையான ஒன்று



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## செய்தி: யெகோவா யீரே, Part 3, *62-0707*

14. என் மனைவி எனக்கு மிகவும் அருமையானவள், பிரான்ஹாம் குடும்பத்துக்கு எதாகிலும் நன்மதிப்பு கொடுக்கப்பட வேண்டுமோனால், அது அவளுக்கே சேர வேண்டும். அவள் தான் எனக்கும் பொது ஜனத்துக்கும் இடையே இருந்தவள். நன்மையாக செய்யப்பட்ட அனைத்தும் அவளே செய்ததாக கருதப்படவேண்டும்.

15. இங்குள்ள ஒவ்வொரு இளைஞனும் மணம் புரியும் போது,

நானும் என் மனைவியும் ஒருமித்து கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளாக மகிழ்ச்சியான மணவாழ்க்கையை நடத்தி வருவது போன்று, அவனுக்கும் ஒரு நல்ல மனைவி கிடைத்து இருவரும் சந்தோஷமாயிருப்பார்களென்று நம்புகிறேன்.

17. *“மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான்”* என்று சாலொமோன் கூறியுள்ளான்.(நீதி 18:22) *“குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்கு கிரீடமாயிருக்கிறாள். அநீதியுள்ளவளோ அவனுடைய*

*இரத்தத்தில் தண்ணீராக இருக்கிறாள்."* அவனுடைய இரத்த ஓட்டமே அவனுடைய ஜீவன். எனவே அநீதியுள்ளவள் அவன் பெற்றுக்கொள்ளக்கூடிய மோசமான ஒன்று. ஆனால் நீதியுள்ளவளே, இரட்சிப்புக்கு அடுத்தபடியாக அவன் பெறக்கூடிய மிகவும் நன்மையான ஒன்று. தேவன் மனிதனுக்கு மனைவியைவிட நன்மையான ஒன்றைக் கொடுக்க முடிந்திருந்தால் கொடுத்திருப்பார். ஏனெனில் தேவன் தமது பிள்ளைகளுக்கு நன்மையானவைகளையே அருளுகிறார். அவர் அவனுக்கு

மனைவியைத் தந்திருக்கிறார். அதற்காக நான் நன்றியுள்ளவனாயிருக்கிறேன்.



நீங்கள் தேவனுக்காக எதையாகிலும் செய்ய விரும்பினால், அவருடைய ஜனங்களுக்கு எதையாகிலும் செய்யுங்கள். நீங்கள் உங்களைக் குறித்துக் கூறப்படும் நல்ல காரியம் எதையாவது விரும்புவீர்கள் என்றால், வேறு யாரைக் குறித்தாவது நல்ல காரியம் ஏதாவது கூறுங்கள். வேறு யாரையாவது ஆசீர்வதியுங்கள், நீங்கள் வேறு யாரையாகிலும் ஆசீர்வதிக்கையில், நீங்கள் தேவனையே ஆசீர்வதித்துக் கொண்டிருக்கிறீர்கள். இயேசு, "இந்த என்னுடைய சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" என்று கூறியிருக்கிறார். எனவே, அது சத்தியம் என்பதை நாம் அறிவோம்.

செய்தி: **எங்கள் நம்பிக்கை தேவனிடத்தில் இருக்கிறது**

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

Only believe, Only believe
All things are possible,
Only believe.

சகோ. பினேகாஸ்
போன்: 8838623242, 9551855108
Email: jebakumarsa@gmail.com
www.thefinish.in